1994 ஏப்ரல் 5]

தருவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். தாய் இறால் கிடைப்பதற்கு மிகுந்த சிரமம் இருக்கிற காரணத்தினால், அந்தப் பயிற்சி அங்கே அளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை ஏற்று, அந்த இடத்திலே தனியார் இறால் வளர்ப்பதற்கு முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான பயிற்சியும், மற்றும் உதவித் தொகையும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

185--

விசைத்தறி தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைத்தல்.

***23564*-திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விசைத்தறி தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை-

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

விசைத்தறித் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு

உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி கைது செய்யப்பெற்றது குறித்து

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள்; நான் இதைச் சொல்லிவிடுகிறேன், பிறகு நீங்கள் எழுப்பலாம். (குறுக்கீடுகள்)

என்னிடம் ஒரு அறிவிப்பு இருக்கிறது. அதைச் சொன்னபிறகு, நீங்கள் கிளப்புங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நான் இதைச் சொன்னவுடன், நீங்கள் சொல்லலாம். நான் ஒரு அறிவிப்பைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :-

"Thiru R. Thamaraikani, MLA (Independent), Srivilliputhur Constituency, was arrested on the 4th April 1994 at 23-30 hours at Government Estate, Madras-2 in D-7 Government Estate Police Station Cr. No. 23/94 under Sec. 448, 341, 337, 324 and 307 IPC registered on the complaint of Thiru K.S. Rajagopal, Manager, Tamil Nadu Legislature Congress Party Office against him. He was produced before the Chief Metropolitan Magistrate, Egmore today at 6-00 hours with a request to remand him to Judicial custody, pending further investigation in the case. The Chief Metropolitan Magistrate ordered to keep him in Judicial remand till the 19th April 1994. Accordingly, he was lodged at Madras Central Prison at 7-00 hours."

4. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை அவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள அனுமதிக்குமாறு வேண்டுகோள்--பேரவைத் தலைவரின் தீர்ப்பு

முற்பகல் 11-15

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் ஆரம்பித்து, தொடர்ந்து கவர்னருடைய உரை, நிதி நிலை அறிக்கை, அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு துறையினுடைய கொள்கைக் குறிப்புகளை வைத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பல்வேறு துறைகள் சிறப்பாகச் செயல்படக்கூடிய வகையில், அந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் இரண்டாவது நாளாக இன்று தொடங்க இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது காங்கிரஸ் கட்சி. தொடர்ந்து அந்தக் கட்சியினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், அதனுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பிரதானமாக தங்களுடைய தொகுதி பற்றிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசக்கூடியவர்கள்--இன்றையதினம் தங்களுடைய தீர்ப்புக்குள் செல்லவில்லை--நீங்கள் முழுமையாக இந்தச் சட்டமன்றப் பேரவையில் அவர்கள் மன்னிப்புக் கேட்டுத்தான் வரவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்குத் தீர்ப்பு வழங்கிய